பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை: சதம் 75

ஓர் நற்செய்தி

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 500 அல்லது மில்க்வைற் பார்சோப் மேலுறைகள் 50 அனுப்பி அழகிய துவாய் ஒன்றை பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்
த. பெ. எண்: 77
யாழ்ப்பாணம்

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 18 ஷவ்வா 1 இதழ் 169
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 2-8-1981

அரியசந்தர்ப்பம்

நல்ல இன
முந்திரிகைக் கன்றுகளும்,
நல்ல இன
தென்னங்கன்றுகளும்
விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவும்:

அண்ணபாம்
இணுவில்

### வைத்திய நிபுணர்களின் பரிசோதனையின் பின்

# 2 பொலிஸார் கொழும்பில் சிகிச்சைபெறச் சென்றனர்

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த 3 பொலிஸ் கான்ஸ்டபிள்களில் இருவர் நேற்று விசேஷ விமானத்தில் சிகிச்சைக்காகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கொழும்பிலிருந்து வந்த இருவைத்திய நிபுணர்களான டாக்டர் லாகுல்ண சேகரா, டாக்டர் சில்வா ஆகியோரின் பரிசோதனையைத் தொடர்ந்து இவர்கள் இருவரும் நேற்று நண்பகல் ஒரு மணிக்கு ஆஸ்பத்திரியிலிருந்து கொண்டு செல்லப்பட்டனர்.

சிகிச்சை பெற்று வந்த கான்ஸ்டபிள்கள் பந்தலு சேனு, நஸீர் ஆகியோரே கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். மற்றொரு கான்ஸ்டபிளான குருசாமியையும் வைத்திய நிபுணர்கள் சோதனை செய்து கொழும்பிற்கு மாறு ஆலோசனை கூறிய போதும் அவர் செல்லவிரும்பவில்லை எனத் தெரியவருகிறது.

இதேவேளை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி 10ம் வார்ட்டின் ஒருபகுதியில் நேற்று இராணுவத்தினர் தங்கியுள்ளனர்.

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த கான்ஸ்டபிள் குருசாமி சிகிச்சைபெற்றுவரும் 6ம் வார்ட்டில் பொலிசாரும், இராணுவத்தினரும்கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

கான்ஸ்டபிள் குருசாமியை உறவினர்கள், நண்பர்கள் தினமும் பார்வையிடுகின்றனர். அவருக்கு அவசிய மேற்படின் மற்றொரு சத்திர சிகிச்சை நடைபெறலாம் எனக்கூறப்படுகிறது. (க-அ)

## தற்காலிக வேலை நீக்க உத்தரவுபற்றி ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டைச் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து லீவு பெறுமல் கொழும்பு சென்ற 45 பொலிசார் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

முதலில் யாழ்ப்பாணத்திற்கு சென்று அங்கிருந்து இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்குமாறு இவர்களிடம் தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

மீண்டும் வந்து கடமையை ஏற்காத இவர்களுக்கு தற்காலிக வேலை நீக்க உத்தரவு வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படுவதாக அறியப்படுகிறது. (க)

யாழ். பெரிய ஆஸ்பத்திரி

## 10ம் வார்ட்டில் இராணுவம் நோயாளிகள் அச்சம்!

[யாழ்ப்பாணம்]

யாழ். பெரிய ஆஸ்பத்திரி 10-ம் வார்ட்டில் இராணுவம் தங்கியிருப்பதால், அந்த வார்ட்டில் தங்கியுள்ள நோயாளிகளும், ஆஸ்பத்திரி ஊழியர்களும் அச்சமடைந்துள்ளனராம்.

இது பற்றி நேற்றுக் காலை வைத்திய அத்தியட்சகரிடம், புகார் செய்திருப்பதாகத் தெரிகிறது.

இராணுவத்தினர், நேற்று முன்தினம், ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் தங்கியிருந்ததாகவும் பின்னர் 10ம் வாட்டிற்கு மாற்றப்பட்டதாகவும் தெரிகிறது. [க-இ]

## இப்பொலிஸ நிலையங்களில் புகாரைத் தெரிவிக்கலாம்

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை குருநகர் பொலிஸ் பகுதிகளைச்சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம்பொலிஸ் நிலையத்தில் தமதுபுகார்களைபதிவுசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக உயர்பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மூடப்பட்ட சங்கானைப் பொலிஸ் பகுதியில் உள்ள மக்கள் காங்கேசன்துறை கோப்பாய் பொலிஸ்பகுதி மக்கள். சுன்னாகம் பொலிசிலும்

[6ம் பக்கம் பார்க்க]

## "மக்களின் குறிக்கோளை முன்வைத்து நடப்போம்!"

### யாழ். மா. அ. சபைத் தலைவர்

[மாவிட்டபுரம்]

"மக்கள் எந்த குறிக்கோளை முன்வைத்து வாக்களித்தார்களோ அதற்கமைய நடக்க நாம் உறுதி பூண்டுள்ளோம். அபிவிருத்திசபைமூலம் எமது தமிழ்ப்பகுதிகளுக்கு ஆற்றக்கூடிய பணிகள் முழுவதையும் நிறைவேற்ற நாம் பின்னிற்க மாட்டோம். அரசியல் பேதங்களை மறந்து எமது மக்களது ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திசபை மூலம் வழிவகைகளை ஏற்படுத்துவோம் "

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா மல்லாகத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசும்போது கூறினார்.

மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் சங்கம் ஆகியவற்றின் ஆதரவில் திரு. சு. பாஸ்கரன் தலைமையில் இவ்வரவேற்பு நடந்தது. திரு நடராசா தமது இல்லத்திலிருந்து மல்லாகம் கி. அ. சங்க மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்.

இவ்வரவேற்பில்மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் இந்த அபிவிருத்திச்சபைகளை திறமையாக செயல்படுத்தி எமது திறமையை வெளிப்படுத்துவதுடன் தமிழ்ப்பகுதிகளையும் முன்னேற்றவேண்டும்" என்றார்.

சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு உட்பட பலர் பேசினர். [இ]

'ஈதுல்பித்ர்'
வாழ்த்துக்கள்

வாசகர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது 'ஈதுல்பித்ர்' வாழ்த்துக்கள். [ஆ-ர]

## ரயில்விபத்து 15 பேர் பலி

இஸ்லாமாபாத், ஆக. 31

பாகிஸ்தானில் இடம்பெற்ற பிரயாணிகள் ரயில் விபத்தொன்றில் 15பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## ஜெர்மன் புறப்பட்டவர்கள் பம்பாயிலேயே திரும்பினர்

[யாழ்ப்பாணம்]

மேற்கு ஜெர்மனிசென்ற 24 தமிழ் இளைஞர்கள் பம்பாய் விமான நிலையத்தில் வைத்து திருப்பிஅனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் ரயில் மூலம் சென்னைவந்து அங்கிருந்து மதுரைக்குச்சென்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

ஜெர்மனி செல்வதற்கு விசா இல்லாததினாலேயே தாங்கள் திருப்பி அனுப்பப்பட்டதாக அக்குழுவில் வந்த இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை வந்தவுடன் மீண்டும் விமான மூலம் புறப்பட முயற்சித்ததாகவும் விசா இல்லாமல விமான டிக்கட் தர மறுத்துவிட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

விமான டிக்கட்டிற்கு 9200 செலவிட்டதாகவும், சொந்தம்பணத்திலேயே பம்பாயிலிருந்து திரும்பி வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## அவசர கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபையின் நிலையியற்குழு நாளை அவசரமாகக் கூடுகிறது. [இ]

V. R. V.
போக்குவரத்துசேவை
கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

யாழ் - கொழும்பு சேவை
கொழும்பு - யாழ் சேவை
[illegible]ப்பாதை
ரூபாய் 40/- மட்டுமே

யாழ் - திருமலை சேவை
திருமலை- யாழ் சேவை
ரூபாய் 25/- மட்டுமே

ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்:
யாழ். 1: V.R.V. ரன்ஸ்போட்அலுவலகம்,
சேகரம் கட்டிடம், 188/3 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8162
2. றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்
தொலைபேசி: 464, 7889.
கொழும்பு: 271, செட்டியார் தெரு
தொலைபேசி: 32540, 34800.
திருகோணமலை: நெஸ்கபே
401, டொக்யாட் வீதி, திருகோணமலை. போன்:482

# வரி விளம்பரம்

### தேவை

கொம்பியூட்டர், ஓடர் எடுக்கக்கூடிய மனேஜர் தேவை. நேரில் வரவும். சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 0494

### கல்வி

மோட்டார் வாகனங்களும், டீசல் யந்திரங்களும், ஆரம்ப மின் பொறியியலும், மின் இணைப்புக்களும், தொழில் முறை இரசாயனம் (பெண்களுக்கு மாத்திரம்) மேற்கூறியவற்றை பயில விரும்புவோர் தயவுசெய்து ஜெயம் பார்மசி, அச்சுவேலி என்ற இடத்தில் 20/- கட்டி பதிவு செய்யவும். புதிதாக அச்சுவேலியில் அமைக்கப்படவிருக்கும் பொறியியல் கல்வி நிலையத்தில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கல்வி யூட்டப்படும். 0489

### சேவை

சிறந்த அனுபவம், திறமை மிக்க ஆலோசகர்களுடன் தொடர்பு கொள்ளவும், காணி வீடு வசதியுடன் உண்டு. காணிகள் விற்க விரும்புபவர் தபால் மூலம் அல்லது நேரிலோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- பதிவு இலக்கம் 13575, செல்வாஸ் ஆலோசகர் நிலையம், 478/2, கே. கே. எஸ். ரோட், இலவின் சந்தியடி, யாழ்ப்பாணம். 0488

### விற்பனைக்கு

ஆறுமாதப் பாவிப்பில் உள்ள YC 60 மொடல் "யமஹா" இருசக்கர டிரக்டர் விற்பனைக்கு உண்டு. முகவரி:- K. T. RAJAH "இரத்தின விலா" கோப்பாய் தெற்கு கோப்பாய். 0442

திருநெல்வேலி இராசபாதை வீதி கூட்டுறவு பால் பண்ணை வீதிச்சந்தியில் மோட்டர் கிணறு உட்பட சகல வசதிகளுடன் கூடிய பத்துப் பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு கொள்ளவும். இ. துரைசிங்கம் ஸ்டேசன் வியூ. கோண்டாவில். 0476

புலோலி தெற்கில் பிரபல்யமான பகுதியில் நான்கு அறைகளைக் கொண்ட நவீன கல்வீடு வளவு விற்பனைக்குண்டு. காணிக்குள் தனியான கிணறு, இரு பக்கமும் சுற்றுமதில், பிரயோசனமான மரங்கள் நாட்டப்பட்டுள்ளன, காணி ஆறரைப் பரப்பு. வீட்டின் ஒரு அறையில் கிராமசேவையாளர் காரியாலயம் உண்டு. விபரங்களுக்கு டாக்டர் எஸ். பசுபதிராஜா, மே/பா, சட்டத்தரணி கே. குணரெட்ணம் வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை. தொலைபேசி: 216 (0461)

### விற்பனைக்கு

உழுந்து உடைக்கும், மாவு அரைக்கும் கல்லு இறைண்டர் 24" உடனடி விற்பனைக்குண்டு. குமரன் மில்ஸ், 241, நாவலர் ரோட், யாழ்ப்பாணம் 0486

நீர்வேலி - இராசவீதி-காத்தான் சந்திக்கு அருகாமையில் விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்ற 10 பரப்பு செம்மண் நிலம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: M. சுந்தரமூர்த்தி, 114, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0459

புனரமைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்துள்ளோம். நா. சாம்பசிவம் அன் கோ. யாழ்ப்பாணம். 0479

பிரிட்டிஷ் லெலண்ட் (British Leyland) FG250 LDF மொடல் (1975) புதுப்பிக்கப்பட்ட லயிட் லொறி (Light Lorry) விற்பனைக்குண்டு. கூடிய விலை கோருபவர்க்கு விற்கப்படும். 22, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி. 0468

### தேவை

நம்பிக்கையும், நாணயமும் அனுபவமும் உள்ள நடுத்தர வயதான கார் சாரதி தேவை சம்பளம் நேரில் பேசி முடிவு செய்யப்படும். ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும் - சிக்மா பஸ் காரியாலயம் 50, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் 0472

அனுபவமும், நற்குணமும் உள்ள ஒரு (ஆண்) சமையற்காரர் தேவை. ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும் - சிக்மா பஸ் காரியாலயம் 50, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் 0473

## புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## பகிரங்க ஏலவிற்பனை 15-8-1981

"இசுசு" லொறி இலக்கம் 24 ஸ்ரீ 921

மேற்படி லொறி 15-8-1981 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும். மேற்படி லொறியை நேரில் பார்வையிடுவதற்கும், இந்தப் பகிரங்க ஏலவிற்பனை தொடர்பான மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் அறிந்து கொள்வதற்கும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
புங்குடுதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

28-07-1981 0470

## விற்பனைக்கு ட்ராக்டர்

மஸிபேர்குஸன் மொடல் M F 240 ட்ரெயிலருடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்:

## குறெஸ் வேர்ல்ட் ரவல்ஸ் அன் ரான்ஸ்போர்ட்

இல. 104 / 1, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். 0480

## இடமாற்ற ஏற்பாடு

கொழும்பிலுள்ள ஓர் அரசாங்க நிறுவனத்தில் இடமாற்றம் பெற விரும்பும் ஆங்கில சுருக்கெழுத்தாளர் யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க நிறுவனத்தில் கடமைபுரியும் ஒருவரோடு இடமாற்ற ஏற்பாடு செய்ய விரும்புகிறார். தொடர்புகொள்க:-

MISS R C. JEYAMALAR,
100, Saranankara Rd Dehiwela (0492

## பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, தமிழ் அலுவல்கள் அமைச்சு நடாத்தும் சிற்ப, ஓவிய கைப்பணிப் போட்டிகள் - 1981

இந்தப் போட்டிகள் திறந்த போட்டி எனவும், பாடசாலை மாணவர்களுக்கானவை எனவும் இரண்டு பிரிவாக நடைபெறும்.

சிற்பப் போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகள் பிரதேச ரீதியாக நடத்தப்படும். தமிழ்ப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ்ப் பேசும் கலைஞர்களும் விரும்பினால் பங்குபற்றலாம். அவர்கள் பிரதேச அபிவிருத்தி அமைச்சிற்கு விண்ணப்பிக்கலாம்.

விதிகளையும், விண்ணப்பங்களையும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

போட்டி முடிவு திகதி: 31-10-81

எழுதவேண்டிய முகவரி:

தமிழ் அலுவல்கள் பணிப்பாளர்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
244, காலி வீதி, கொழும்பு-4

0469

## அறிவித்தல் ஏலவிற்பனை உழுந்து

வவுனியா வடக்கு (நெடுங்கேணி) பல நோக்கு கூட்டுறவுச்சங்க அலுவலகத்தில் 5-8-81ம் திகதி காலை 11-00 மணிக்கு 25084 கி. கி. உழுந்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும், ஏலவிற்பனை பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக நடைபெறும்.

1. பகிரங்க ஏலத்தில் கேள்வி கேட்க விரும்புபவர்கள் உழுந்தை சங்கக் கடமை நேரங்களில் பார்வையிடலாம்.
2. கேள்வி கேட்க விரும்புவோர் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னதாக ரூபா 5000/- மீளளிக்கப்படும் வைப்புத்தொகையாக செலுத்துதல் வேண்டும்.
3. கூடிய விலை கோரியவர்களுக்கே உழுந்து விற்பனை செய்யப்படும்.
4. ஏலமிடப்பட்டவுடன் ரூபா 25,000/- மீளளிக்கப்படும் வைப்புத் தொகையாகச் செலுத்துதல்வேண்டும், இப்பணம் உழுந்து முழுவதும் பணம் கட்டி அப்புறப்படுத்தப்பட்ட பின்னரே திருப்பித் தரப்படும்.
5. ஏலவிற்பனைத் தினத்திலிருந்து ஒரு கிழமைக்குள் பணம் செலுத்தி உழுந்து முழுவதும் அப்புறப்படுத்துதல்வேண்டும்.
6. உழுந்தின் மதிப்பீட்டு விலை கேள்வி கேட்பவர்களுக்கு பகிரங்க ஏல விற்பனைத் தினத்தன்று தெரிவிக்கப்படும்.
7. இவ் ஏலவிற்பனை சம்பந்தமாக எந்தவிடயத்திலும் மேற்படி சங்கத்தின் தீர்ப்பே முடிவானதும் பூரணமானதும் ஆகும்.

(ஒப்பம்)
பொ. மங்களஜெயநாதன்
தலைவர்,
வ. வ. ப. நோ. கூ. சங்கம்.

வவுனியா வடக்கு:
ப. நோ. கூ. சங்கம்,
நெடுங்கேணி,
18-7-81. 0394

## இறக்குமதியாளர்களுக்கு ஓர் நற்செய்தி

குறைந்த கட்டணத்தில் துரித நேரத்தில் பாதுகாப்பான முறையில் உங்கள் இறக்குமதிப் பொருட்களை சுங்க விலக்குச் செய்து அனுப்பி வைப்பதற்கு (For clearing and forwarding) நீங்கள் நாடவேண்டிய விலாசம்

## குறெஸ் வேர்ல்ட் ரவல்ஸ் அன் ரான்ஸ்போர்ட்

இல. 104 | 1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (0481)

## வெற்றிடங்கள்

KUSHIBA

யாழ்ப்பாண மாவட்டம்,
(மாவிட்டபுரம் .வல்லை,
யாழ்ப்பாணம். (கிளிநொச்சி.)

காட்சி அறைக் கவுன்சிலைகள் நிர்வகிப்பதற்கும் தொழிற்சாலை நிர்வகிப்பதற்குமுரிய பயிற்சியாளர்களாக எத்துறையிலுமுள்ள பட்டதாரிகள் தேவைப்படுகின்றனர். அத்துடன் மோட்டார் கார், மோட்டார் லொறி போன்றவற்றிற்கு சாரதிகளும் வெவ்வேறு தொழில்களுக்கும் பயிற்றுவதற்கு பயிற்சியாளர்களும் தேவை. தயவுசெய்து உடன் விண்ணப்பிக்கவும் நேர்முகப் பரீட்சைகள் மாவிட்டபுரத்தில் நடைபெறும்.

## குஷிபா குரூப் ஓவ் கம்பனிகள

த. பெ. எண் 1784,
கொழும்பு.

0488

## முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி



திரு. சு. யோசேப அன்ரன்
(பொலிஸ் சார்ஜன்ட் யாழ்ப்பாணம்)

தோற்றம்:- 1915-11-14
மறைவு:- 1980-8-2

அன்பே உருவான எங்கள் தெய்வமே! நாட்டின் நன்மைக்காக, உமது உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணித்து கடமை, கண்ணியம் என்று இரவு பகல் பாராமல், பாரபட்சமின்றி உழைத்து தொண்டாற்றினீரே! எமது எதிர்காலத்தை ஒளிமயமாக்கிவிட்டு, பிள்ளைகளைத் தனியாய்த் தவிக்கவிட்டு ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது தந்தையே! நாம் உங்களை எமது உயிர் உள்ளவரை என்றென்றும் மறக்கமாட்டோம் அய்யா! என்றும் உங்கள் நினைவாகவே இருப்போம். உங்கள் ஆத்ம சாந்திவேண்டியும் பிரார்த்திக்கின்றோம். உங்கள் நினைவில், வாடும், மனைவி-பிள்ளைகள், தந்தை, சகோதரர், சகோதரிகள், உறவினர்கள்.

வாய்க்கால் ஒழுங்கை, மாதகல்.

0493

விளம்பரம் செய்க வியாபாரம் பெருக

### இன்று வண்ணை தையல் நாயகி அம்மை தேர்

# அம்பிகையின் அழகு வெள்ளம்

**- ந. ரா. முருகவேள் -**

(ஆசிரியர் 'திருக்கோயில்')

அருளலாது
உலகம் உண்டோ?

அம்பிகை வேதங்களின் பொருளாய் விளங்குகின்றாள். அவளது கண்கள் செவ்வரி பரந்து எழிலுற்றுத் திகழ்கின்றன. தன் மணவாளராகிய சிவபெருமானைப்போல, அம்பிகையும் மூன்று கண்களை உடையவளாகத் திகழ்கின்றாள். அம்மூன்று கண்களும் இராசதம், சாத்துவிகம், தாமதம் என்னும் மூன்று குணங்களுக்கும், அம் மூன்று குணங்களுக்குரிய மும்மூர்த்திகளுக்கும், பிறப்பிடமாகவும் நிலைக்களமாகவும் திகழ்கின்றன. அம்பிகையின் அருளையல்லித் தனியே உலகம் என்பது ஒன்று உண்டோ? அம்பிகையின் அருளினாலேயே உலகங்களெல்லாம் நிலைபெற்று இயங்கிவருகின்றன

வரி விழிச் செம்மை
வெண்மை
வனப்புறு கருமை மூன்றும்
எரிசெற கதிர காலத்து
இறந்த முப்பொருளும்
தோன்றும்
சரு எனக் குணங்கள்
மூன்றின்
காரணம் என்னப் பெற்றுன்
அருமறைப் பொருளே!
உன்றன்
அருளலாதுலகம் உண்டோ?

அலை எறி நயன வேலை:

தன்னை அன்பினால் வழிபட்டுப் போற்றும் அடியவர்களின் காம, வெகுளி, மயக்கம் ஆகிய மும்மலங்களை, தன்னுடைய கண்களின் அருட்பார்வையால் அம்பிகை போக்கியருள்கின்றாள். அம்பிகையின் முக்கண்களின் சேர்க்கை சிறக்கையைத் திரிவேணி சங்கமம் என்று குறிப்பிட்டருளிய ஆசிரியரின் கவிதைத் திறன் பெரிதும் போற்றற்பாலது!

அம்மை நின் கருணை பொங்கி
அலை எறி நயன வேலை
மும் மணி கெழும் உன்
தொண்டர்
மும்மலம் களைய மூழ்கச்
செம்மை நற் சேணையாறு
தெளி கங்கை யமுனை
மூன்றும்
தம் மயத் தொடும் வந்துற்ற
தன்மை ஈ தென்பர்
மிக்கோர்!

இமையா நாட்டம்

மீன்களுக்குக் கண் இமைகள் இல்லை. அதனால் மீன்கள் கண்ணை இமைப்பது இல்லை. தம் கண்களை இமைக்காமல் திறந்து கொண்டேயிருத்தல், மீன்களுக்கு இயல்பு.

''மீன்கண் துஞ்சும், பொழுதும்
யான் கண் துஞ்சலன், யாது கொல்நிலையே?''

எனவரும் நற்றிணை வரிகளால் மீன்கள் கண் இமையாது இருக்கும் தன்மையினை உணரலாம். இத்தகைய மீன்களைப்போல, அம்பிகையும் தன் கண்களை இமைக்காமல் இடையறாது எப்பொழுதும் மிக விழிப்பாக இருந்து உலகத்தைப் பாதுகாத்து வருகின்றாள். ஆதலின் அம்பிகைக்கு மீனாட்சி என்னும் ஒரு காரணப்பெயர் வழங்குவதாயிற்று.

"இணைவிழி இமையா நாட்டம்

எய்திய அலரத் தோன்றும்
பணைதரும் புவனம். இந்தப்
பார்வை சற்றினமக்குமாயின்
தணையிழந்து அழிவ தண்ணித்
துணிந்த நின் கருணை என்றால்
கணையினும் கொடிய தென்னக்
கடவதோ? கடவுள் மாதே!"

கடிநிகர் நிலவு
காட்டிலும் காயுமே!

அம்பிகையின் கண்கள் நீண்டன. கரிய நெய்தல் மலர்களைப் போன்றவை. அவற்றில் அருள்நிறைந்து கடல்போலப் பெருகி நிற்கும். அம்பிகையின் கடைக்கண் நோக்காகிய அருட்பெருங் கடலில் மூழ்கினால், பிறவித்துன்பவசமாகிய கடலைக் கடக்கலாம். ஆதலால் பிறவித் துன்பமாகிய கடலைக் கடக்க, அம்பிகையின் கடைக்கண் நோக்கமாகிய அருட் கடலில் மூழ்குதல்வேண்டும். அது தவநலஞ் சான்றவர்களுக்கே இயலும் எனினும் மாடகூடங்கள் நிறைந்த நகரத்தில் காய்கின்ற நிலவே, கொடிய கரிந்த காடுகளிலும் கூடக் காய்வதுபோல, தவநலம் அற்ற என்போன்றோரையும், நின் அருட்பார்வையாகிய கடலில் மூழ்கித் திளைக்கும்படி செய்தருள்க!

நெடியகட் கரிய நெய்தல்
நிறையருட் சலம் எய்தாக்
கொடியனேன் பிறவித் துன்பக்
குறைகடல் கடந்து மூழ்க
விடின், அற்றி குறைவ
துண்டோ?
மெய்த்தவர்க்கு ஒழிந்து
ருதோ?
கடிநகர் நிலவு காட்டிறம்
காயுமே! கருணை வாழ்வே"

விலையில் பாடல் அமுது

அம்பிகை, பெருமைமிக்க மடந்தைப் பருவத்தினள். அவளை வெண்தாமரை மலரில் வீற்றிருக்கும் கலைமகள் அருகே புடைசூழ வணங்கி வழிபடுகின்றாள். அங்ஙனம் வழிபடுங்கால், இனிய சிறந்த இசைமிக்க பாடல்களைப் பாடிக்கொண்டிருக்கின்றாள். அவ்விசை அமுதமாகத் திகழ்ந்து அம்பிகையின் செவிக்கு இனிய உணவாக அமைகின்றது. அவ்வினிய பாடல் இசையைக் கேட்டு அம்பிகை மகிழ்ச்சியுற்றுத் தன்திருமுடியை அசைத்துப் பாராட்டுகின்றாள். அங்ஙனம் அம்பிகை திருமுடியை அசைக்குங்கால், அவளது காதில் உள்ள குண்டலங்கள், ஒன்றோடொன்று மோதுகின்றன. அதிலிருந்து 'பூரை பூரை' என்னும் ஒருவகை மங்கல ஓசை பொலிவுபெறுகின்றது.

வேரிநாள் மலர்க்குள் வாணி
விலைபில் பாடல் அமுதெலாம்
சேர, மாமடந்தை நின்
செவிக்குண அருந்தவே,
ஆரமான் முடி அசைப்ப,
ஆடி எற்று குண்டலம்,
பூரை பூரை என்ற சொற்
பொலிந்து ஓசை பெற்றதே!

## நூலகம் எரிந்தது யாழ் மக்களுக்கு பேரிழப்பாகும்

ஒரு பொதுசன நூலகம் ஓர் அறிவுக் களஞ்சியம். "வாசிப்பதன் மூலம் ஒருவன் பூரண மனிதனாகலாம்" என்பது பிரான்சிஸ் பேக்கனின் மகா வாக்கியம்.

சிறுவர் முதல் வயோதிபர் வரை பயன்படுத்திவந்த நமது நூலகம் தீக்கு இரையானது யாழ் மக்களுக்கு ஒரு பெரும் நட்டமாகும். 'ஒரு நல்ல புத்தகம் ஒரு உத்தம நண்பன்' என்பார் ஜெரால்ட்.

தேவாரம், திருவாசகம், திருமந்திரம், சரித்திரம், பூமிசாத்திரம், விஞ்ஞானம் மற்றும் பல பெரியோர்களின் சுயசரிதைகள், டினிஸன், டிக்கன்ஸ், ஸ்டீவன்ஸன், சோமசெட் மோகம், ரஸ்கின் ஆகியோரின் புகழ்பெற்ற நாடகங்களும், சேக்ஸ்பியர், ராதாகிருஷ்ணன், ஷெல்லி, மில்டன், தாகூர், இப்ஸின், ஓமார் கையாம் ஆகியோரின் படைப்புகளும், பல சமய நூல்களும் தீக்கிரையானது பெரும் துக்ககரமான விடயம். இந்தப் படைப்புகளின் அருமையை இவைகளைப் படித்தவர்களே அறிவர். ரஸ்கினின் 'அன்டு தி லாஸ்ட்' என்ற நூல் தமது வாழ்க்கையையே திசைதிருப்பி விட்டதென்று மகாத்மாஜி அவரது 'சத்திய சோதனை' என்ற நூலில் சொல்லியிருக்கிறார். வாசிக்கும் பழக்கத்தைச் சிறு வயதிலேயே பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குப் பழக்கவேண்டும். தலைசிறந்த தரமான புத்தகங்கள் அறிவை ஊட்டி வாழ்க்கையைப் பயனுள்ளதாக்கும். ஒவ்வொருவரும் தமது வாழ்க்கை ஆட்டத்தைச் செம்மையாக, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் ஆடினால் உலகில் துன்பம் ஏது?

(4-ம் பக்கம் பார்க்க)


# அகில உலக இந்து மாநாடு 1982

## இந்துசமய ஏற்றத்தைப் போற்றவும், எழுச்சியை ஊட்டவும், ஆன்மீக வளர்ச்சியை அகில உலகெங்கும் பரப்பவும், இலங்கையில் கூடுகின்றது,

# அகில உலக இந்து மாநாடு.

**நாள்:-** 1982 ஜனவரி 22 ஆம் திகதி முதல்
1982 ஜனவரி 26 ஆம் திகதி வரை
ஐந்து நாட்களுக்கு நடைபெறும்.



**இடம்:-** கொழும்பு
★ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்.
★ இராமகிருஷ்ணமிஷன் சர்வதேச மாநாட்டு மண்டபம்.
★ கதிரேசன் மண்டபம். ★ டவர் மண்டபம்.
★ சரஸ்வதி மண்டபம்.

**நிகழ்ச்சிகள்:-** ★ இந்துசமய ஆராய்ச்சிக் கருத்தரங்கு ★ சமய நூல்கள், சிற்ப ஓவியக்கண்காட்சி. ★ கலை நிகழ்ச்சிகள். ★ கலாசாரச் சுற்றுலா முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

**கலந்துகொள்வோர்:-** அகில உலக இந்துசமய சாதுக்கள், துறவிகள், சமயப்பெரியார்கள், யோகிகள், குருமகாசன்னிதானம், அறிஞர்கள், கவிஞர்கள், யாவரும் ஒன்றுகூடுகின்றார்கள். ஆன்மிக அறிவூட்டும் கருத்துக்களை இந்துசமய மக்களுக்கு இம்மாநாட்டின் வாயிலாக வழங்க இருக்கின்றார்கள்.

பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கல்
இந்துசமய இந்து கலாசார அமைச்சு
தபால் பெட்டி இலக்கம் 1700 — 244, காலி வீதி,
கொழும்பு-4.

விளம்பர அன்பளிப்பு:- மில்க்வைற் சோப் தயாரிப்பாளர். 0484

# கம்பியா அதிபர் டாவ்டா நாடு திரும்புகிறார்!

## செனகல் துருப்புகளின் உதவியை நாடுகிறார்

டக்கார், ஆகஸ்ட் 1
காம்பியாவின் ஜனாதிபதியான சேர் டவ்டா ஜவாரு நேற்றுமுன்தினம் லண்டனிலிருந்து தனது நாட்டுக்கு விரைந்துள்ளார்.

காம்பியாவின் ஜனாதிபதி பிரிட்டிஷ் இளவரசர் சார்ளின் திருமணத்திற்காக லண்டனில் தங்கியிருந்தபோதே அங்கு புரட்சிச்சதி நடைபெற்றது.

புரட்சியை முறியடிக்க செனகலின் உதவி கோரப்பட்டுள்ளது. செனகலுக்கு காம்பியாவுடன் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் இருப்பதாகவும் புரட்சியை முறியடிக்க செனகலின் துருப்புக்கள் அழைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி டவ்டா தெரிவித்தார். காம்பியாவின் தலைநகரான பன்ஜூல் மீட்கப்பட்டுள்ளதாக செனகல் நாட்டு அறிக்கைமூலம் தெரியவருகிறது. அதேவேளையில் காம்பியாவின் திடீர் புரட்சி துருப்புக்களும் செனகல் நாட்டு துருப்புக்களும் சண்டையை நிறுத்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (து)

## பாரதியாரின் நூறுவது பிறந்தநாள் விழா

சென்னை, ஆகஸ்ட் 1
மகாகவி பாரதியாரின் நூறுவது பிறந்தநாள் விழாவை தமிழகமெங்கும் டிசம்பர் 11ம் திகதியிலிருந்து ஒரு வருடம் கொண்டாட தமிழகஅரசு தீர்மானித்துள்ளது. இதற்கென தமிழக மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் ம. பொ. ஞானம் தலைமையில் குழு வொன்று நியமிக்கப்படும். இதில் சட்டசபை மேலவை உறுப்பினர்கள் உட்பட 100க்கு மேற்பட்டோர் அங்கம்வகிப்பர்.

டிசம்பர் 11ல் பாரதி பிறந்த எட்டயபுரத்தில் நடைபெறும் விழாவிற்கு பிரதமர் திருமதி இந்திராகாந்தி அழைக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகிறது. (து)

## 'தகா'வுக்குப் பத்திரிகை எழுத்தாளர் பாராட்டு

(உடுப்பிட்டி)
இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கம் காலி எம்.பி. டாக்டர் டபிள்யூ தஹநாயக்காவுக்கு பாராட்டுத் தெரிவித்துக் கடிதமொன்று அனுப்பிவைத்துள்ளது.

இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கக்கூட்டம் யாழ் பொன்ட் கல்விநிறுவனத்தில் தலைவர் திரு ஏ. என். எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றபோது காலி எம். பி. டாக்டர் தஹநாயக்காவுக்கு நன்றி தெரிவித்தும் பாராட்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காலி மாவட்ட அபிவிருத்தி சபையின் முதலாவது கூட்டத்தில் அவர் பொதுமக்களின் நன்மைகருதி மாவட்ட அபிவிருத்திச் சபையினால் எடுக்கின்றுக்கும் நடவடிக்கைகளைப் பொதுமக்களுக்குத் தெளிவானமுறையில் அறிந்து கொள்ளவைக்கும் பத்திரிகை நிருபர்களுக்கு சகலவசதிகளையும் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதை வைத்தே இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கம் காலி எம். பி. தஹநாயக்காவைப்பாராட்டியுள்ளது.

## நூலகம் —

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
இளம் சிறார்கள் தங்கள் ஓய்வு நேரத்தை வீணாக்கி, காதலில் தோல்வியுற்று, கெட்ட சகவாசத்தினால், கொலை, தற்கொலைக்கு இலக்காகி வாழ்க்கையைப் பாழாக்காமல் நல்ல தரமான நூல்களைத் தெரிவுசெய்து வாசித்துப் பயனடைவதற்குப் பொதுசன நூலகம் யாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாய் இருந்தது. இது தீக்கு இரையானது மிகவும் வேதனையை உண்டாக்கிவிட்டது உண்ணுவதும், உறங்குவதும் போல வாசிப்பதும் மனிதனுக்கு ஒரு முக்கியமான தேவை. இத்தேவையைப் பூர்த்திசெய்யாவிடில் மனிதனுக்கும் மிருகத்துக்கும் வித்தியாசம் ஏது? சர்வகலாசாலையில் படித்து ஒருசில பாடங்களில் நிபுணத்துவம் எய்திய பட்டதாரிகளிலும் பார்க்க நன்றாக வாசித்த ஒருவர் நூல்களைப் படித்ததின் பயனாகப் பல்வேறு அறிவும் பெற்று ஒழுக்கத்தில் உச்சக்கட்டத்தில் பிரகாசிப்பது நாம் கண்ட உண்மை.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற நாள் முதல் சென்ற 18 வருட காலமாக யாழ் பொதுசன நூலகத்தின் அங்கத்தவராகச் சேர்ந்து நான் பல நூல்களையும், சஞ்சிகைகளையும் வாசித்து அனுபவித்த இன்பம் சடுதியாய்த் தீக்கு இரையானது வாசிப்பதில் என் போன்றவர்களுக்கு ஒரு பேரிழப்பாகும்.

ஒரு யாழ் நூலக வாசகர்

## வெள்ளத்தில் 300 பேர் பலி

புதுடில்லி, ஆகஸ்ட் 1
இந்தியாவின் ராஜஸ்தான், பீஹார், உத்தரபிரதேசம், அஸாம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட கடும்வெள்ளப்பெருக்கால் 300 பேர் உயிரிழந்துள்ளனர் எனத்தெரியவருகிறது.

பஞ்சாப்பில் 50,000 மக்களும் வெள்ளப்பெருக்கினால் பாதிப்படைந்துள்ளார்கள்.

டில்லியிலும் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (து)

## பாக். சனத்தொகை

இஸ்லாமாபாத், ஆகஸ்ட் 1
பாகிஸ்தானின் சனத்தொகை 8 கோடி 37 லட்சமாகும். கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி எடுக்கப்பட்ட குடிசனத்தொகைக் கணக்கெடுப்பில் இருந்து இது தெரியவந்திருக்கிறது. 1972ல் பாகிஸ்தானின் சனத்தொகை ஆறு கோடி 53 லட்சமாகும். பாகிஸ்தானின் சனத்தொகை வருடாந்தம் 3 சதவீதத்தால் அதிகரித்துவருகிறது. (து)

# உத்தரவின்றி கைத்துப்பாக்கி வைத்திருந்ததாக பெண் கைது!

### விசாரணை முடியும்வரை விளக்கமறியல்

(புலோலி)
உத்தரவுப் பத்திரமின்றிக் கைத்துப்பாக்கி வைத்திருந்ததாகக் கருதப்படும் பெண் ஒருவரை பொலிசாரின் விசாரணை முடியும்வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. உடுகம்பொல தலைமையிலான பொலிஸ் கோஷ்டி இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது பொலிகண்டியிலுள்ள கடை ஒன்றை உடைத்துக் கொள்ளையடிக்க முயன்ற மாரிமுத்து குருநாதன், தங்கராசா ஐயவேலு ஆகிய இருவரையும் கைத்துப்பாக்கியொன்றுடனும், இரு தோட்டாக்களுடனும் கைது செய்தது.

இச்சந்தேக நபர்கள் இருவரும் விசாரணை செய்யப்பட்டதைத் தொடர்ந்து உத்தரவுப்பத்திரமற்ற கைத்துப்பாக்கியுடன் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

உத்தரவுப்பத்திரமற்ற கைத்துப்பாக்கியுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரெழு, சுன்னாகத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகேஸ்வரி என்ற பெண் பருத்தித்துறை நீதவான் திரு கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

1979ம் ஆண்டு 48ம் இலக்க (தற்காலிக பயங்கரவாதத் தடைச்சட்டம்) இரண்டாம் பிரிவின் சட்டம் 6, 1இன் கீழ் இக்குற்றம் விசாரணைசெய்யப்பட்டுவருவதாகவும், விசாரணை முடியும்வரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்கவேண்டுமெனவும் சப்-இன்ஸ்பெக்டர் உடுகம்பொல கோரினார்.

நீதவான் சந்தேகநபரை விசாரணை முடியும்வரைவிளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிட்டார், அத்துடன் சந்தேகநபரான பெண், குழந்தைக்குப் பாலூட்டுவதாகத் தெரிவித்தமையால் அக்குழந்தையையும் சந்தேகநபர் விளக்கமறியலில் தன்னுடன் வைத்திருக்க அனுமதிக்குமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும் உத்தரவிட்டார்.

## சர்வதேச இனவெறி எதிர்ப்புக் கருத்தரங்கு

பெர்லின், ஆகஸ்ட் 1
ஐ நா. சபையின் ஆதரவில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தலைநகரான பெர்லினில் இம்மாதம் 31ம் திகதி தொடக்கம் செம்டம்பர் 5ம் திகதிவரை சர்வதேச இனவெறி எதிர்ப்புக் கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது.

தென்னாபிரிக்காவில் இராணுவ இனவெறி ஆட்சியாளரின் அட்டூழியங்களும் பத்திரிகையின் பங்கும் என்ற தலைப்பில் இங்கு விவாதிக்கப்படவிருக்கிறது. ஆசிய ஆபிரிக்க தேசியவிடுதலை இயக்கங்கள் சம்பந்தமாகவும் இக்கருத்தரங்கில் ஆராயப்படவிருக்கிறது. (து)

## அமெரிக்காவின் புதிய குடியேற்றக் கொள்கை

வாஷிங்டன், ஆகஸ்ட் 1
அமெரிக்க ஜனாதிபதி றீகன் நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் புதிய குடியேற்றக் கொள்கையை அறிவித்தார்.

பல லட்சக்கணக்கானோர் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறி இருந்தாலும் அவர்கள் புதிய குடியேற்றக் கொள்கையின் கீழ் அமெரிக்காவில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்கள்

1965ம் ஆண்டுக்குப்பின்னர் அமெரிக்காவின் குடியேற்றச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மிக முக்கிய மாற்றம் இதுவாகும்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியிருப்போரில் பெரும்பாலானோர் மெக்ஸிகோவாசிகளாவர் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## இன்று வண்ணை வைத்தீஸ்வரர் ரதோற்சவம்

(வாழ்ப்பாணம்)
வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலய தேர் ரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. நாளை திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவம் நடைபெறும். தேவஸ்தான வித்துவான் திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் கதாகாலட்சேபம் நிகழ்த்துவார்.

0 0 0 0

## வீரமாகாளி தேர்

வண்ணை நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேர் உற்சவம் இன்று காலை நடைபெறவிருக்கிறது, எட்டுத் திருக்கைகளுடன் கூடிய வீரமாகாளி அம்மன் தேரில் பவனி வருவார். நாளைக் காலை ஆடிப்பூரத் தீர்த்தோற்சவம் நிகழும். விசேட பஜனைக் கச்சேரியும் இடம்பெறும். (மா)

## தமிழ்நாட்டில்மதுவிலக்கு மொரார்ஜி கண்டனம்

புதுடில்லி, ஆக. 1
தமிழ் நாட்டில் மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருப்பதை முன்னாள் இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் வன்மையாக கண்டித்துள்ளார்.


யாழ்.நகரில்மலிவுவிலையில் பொருட்கள். .

- பேப்பர் வகைகள்
- மின்சார பொருட்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- வீட்டுப் பாவனைப் பொருட்கள்

°° நியூஸ் பிரின்ட் பேப்பர் °° பேங் பேப்பர்
(இறக்குமதி, உள்ளூர் செய்யப்பட்டது)
பேங் பேப்பர் கலர்
வைட் பிரின்டிங் (22 1/2x35) (20x30) (D/C)
TISSUE (ரிசு) (வெள்ளை பல வர்ணங்களில்)
GRAPE PAPER (பச்சை, சிகப்புடன், 10 வர்ணங்களில்)
°° பிறவுண் பேப்பர் °° டைப்பிங் பேப்பர்
கடித உறைகள் (பல அளவுகளில்)
பிளாஸ்டிக் குரோசரி பேக்ஸ் & (WEDDING BAG)
Australian Clipsal Switches
அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட கிளிப்சல் சுவிச்சுக்கள், சகலவிதமான லகேஜ், வெடிங் பைகள்
மின்சார அலங்காரப் பொருட்கள், மின்விசிறிகள்
மின் அலங்காரப் பென்டன்கள், இஸ்திரிப் பெட்டிகள்
டோர்ச் லைட்டுகள், பொக்கட் றேடியோக்கள்
கசெட் றேடியோக்கள்
இன்னும் பல பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றிட

அம்பலவாணர் அன் சன்ஸ்

தேசிய கடதாசிக் கூட்டுஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள்- மின்சார இணைப்பு ஒப்பந்தக்காரரும். விற்பனையாளரும்
196 கே. கே. எஸ். வீதி,
(கடைத்தெரு பிள்ளையார் கோயில் எதிரில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8291 தந்தி: "வாணர்சன்ஸ்"
தலைமையகம்:
பேர்ள் லைட்ஸ்
அம்பலவாணர் அன் சன்ஸ்
78, மலிபன் வீதி. கொழும்பு-11 போன்: 24821-28244
லெட்சுமி பவான்
97, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம், தங்களது விற்பனை முகவர்களாக எம்மை நியமனம் செய்துள்ளது.
உங்களுக்குத் தேவையான
சிப்போட், பிளைவூட் வகைகளுக்கும் கதவுகளுக்கும்
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்

# பொல்காவலை எம். பிக்குப் பிணை

[கொழும்பு]
விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் பொல்காவலை எம் பி. திரு. சுவின் ரஞ்சன் ஜெயக்கொடியை 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் பொல்காவலை நீதவானுக்கு உத்தரவு பிறப்பித்தது.

எம். பி. யைப் பிணையில் விடுமாறு கோரி அவரின் சகோதரர் டபிள்யூ. கே. விஜேரத்தின தாக்கல் செய்திருந்த பிணை மனுவுக்கு அரசு தரப்புச் சட்டத்தரணி எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காததை அடுத்து மேற்படி உத்தரவு வழங்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான திரு. ஜே. எல். ஏ. ஸோஸா, திரு. எல். எச். டி. அல்விஸ் ஆகியோர் முன் பிணை மனுவை ஆதரித்து சட்டத்தரணி ஏர்ட்லிபெரேரா வாதிட்டார்.

யாழ். நகரில்
கொழும்பு விலைகளுக்கமைய
இரும்புக்கம்பிகள்,
3/8, 5/8, 1/2''
கூரைத்தகடுகள், நீர் இறைக்கும் மோட்டர்கள்
பெறுவதற்கு நாடுங்கள்
நேரடி இறக்குமதியாளர்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1-2 மொம்சாக் பில்டிங்
ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்

# "பாதுகாப்பற்ற அபிவிருத்தி அர்த்தமற்றது"

## 'யோகேஸ்' கூறுகிறார்

[புலோலி]
''தமிழினத்தைப் பொறுத்த கட்டிலே பாதுகாப்பற்ற அபிவிருத்தி அர்த்தமற்றது. இன்றைய நிலையிலே அபிவிருத்திக்கு முன்னர் எமக்குப் பாதுகாப்பே முக்கியமானது. தமிழினம் அடிக்க அடிக்க ஓடும் இனமாக வாழக்கூடாது''.

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்துக்கு பருத்தித்துறை இளைஞர் பேரவையினரால் நடாத்தப்பட்ட வரவேற்பு விழாவில் கலந்து கொண்டுஉரையாற்றிய யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் குறிப்பிட்டார். பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் திரு. மு. ஈழத்தமிழ் மணி தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் குறிப்பிட்டதாவது!

''தமிழினத்தின் முன்னேற்றத்திற்கும் பாதுகாப்பிற்கும்நாம் எம்மைத் தயார் செய்து கொள்ளவேண்டும். தமிழினத்தின் விடுதலைக்காகவே நான் உழைத்து வருகின்றேன். எனது உடமைகள் பறிக்கப்பட்டாலும் இறைவன் தமிழினத்தின் மீட்சி கருதியேஎனது உயிரைப் பாதுகாத்துள்ளார். எனது உயிர் இருக்கும் வரை தமிழினத்தின் விடுதலைக்காக நான் போராடியே வருவேன்''

''உலகநாடுகளின் விடுதலைப் பயணங்களை நாம் பார்க்கும் போது அவைகள் தமது சகல உடமைகளையும் இழந்துதான் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்பது நன்கு தெரிகின்றது.

''இந்நாட்டில் வாழும் தமிழ் இனம் இன்று இன்னல்கள் அடக்குமுறைகள் என்பனவற்றின்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையிலே தமிழினம் கட்டுக்கோப்புடனும், ஒற்றுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் நேரிய பாதையிலே சிறப்பாகச்செயற்பட்டுவரவேண்டும்'' என்றார் [இ]

### கம்பர்மலை அறுவர் மரணம்

# துரைராசா கையில் துவக்குடன் நின்றார்

[புலோலி]
''வெடிச்சத்தம் கேட்டு நான் கண்விழித்தபோது துரைராசா கையில் துவக்குடனும் அவரது தம்பி கிளியன் கையில் கடதாசிப் பெட்டி ஒன்றையும் வைத்துக் கொண்டு கருணையின் கால்மாட்டில் நின்றதை நான் கண்டேன், ''

இவ்வாறு கம்பர்மலையில் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி மரணமடைந்த அறுவரின் மரண விசாரணையின் போது சாட்சியமளித்த வைத்திலிங்கம் மகேஸ்வரன் [வயது 23] குறிப்பிட்டார், பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ், மகேசன் முன்னிலையில் நடைபெற்ற இம் மரண விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த மகேஸ்வரன் குறிப்பிட்டதாவது:-

நான் வழக்கம் போல் சம்பவதினமிரவு ரோகிணி அம்மா வீட்டில் படுத்திருந்தேன். நள்ளிரவுவேளையில் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. நான் கண் விழித்துப்பார்த்தபோது துரைராசா கையில் துவக்கு வைத்திருந்தார். லாம்புவெளிச்சத்திலேயே அதை நான் கண்டேன்.

துரைராசாவின் தம்பிகிளியன் கையில் கடதாசியால் செய்யப்பட்ட பெட்டி ஒன்று வைத்திருந்தார். இன்னுமொருவர் தூரத்தில் நின்றார். அவரின் பெயர் தெரியாது. நான் கண்விழித்துப் பார்த்த போது துரைராசாவும், கிளியனும் கருணையின்"கால்மாட்டில் நின்றார்கள். நான் வாங்கிலும் கருணை நிலத்திலும் படுத்திருந்தோம். நான் பார்த்தபோது கிளியனும் துரைராசவும் சற்றுத்தள்ளி நின்ற நபரும் திரும்பி படலையை அறுத்துக் கொண்டு சென்றார்கள்.

[விசாரணை தொடர்கிறது]

## இப்பொலிஸ் [illegible]

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பளைபொலிஸ்பகுதிமக்கள்சாவகச்சேரி பொலிசிலும் தங்கள் புகார்களைப்பதிவு செய்லாம் என்றும்அவர் தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை சுதுமலை மானிப்பாய் பகுதிகளில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளிலும் விசாரணையிலும் ஈடுபட்டுள்ளனர். சந்தேகத்திற்குரிய விதத்தில் நடமாடுவோர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுவருகின்றனர்.

ஆனைக்கோட்டைப்பொலிஸ் நிலைய சம்பவத்தைத் தொடர்ந்துவடபகுதியிலுள்ளபொலிஸ் நிலையப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக பொலிசாரும் வடபகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இங்கு வந்துள்ள பொலிசாரில் ஒரு பகுதியினர் சாவகச்சேரியில் முகாமிட்டுள்ளனர். இரவு நேரங்களில் பொலிஸ் நிலையங்களைச் சுற்றி ஒளி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. [க-அ]

## அ. ச உறுப்பினரின் தாயார்காலமானார்

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. மு, தம்பிமுத்துவின் தாயார் நேற்று காலமானார். [இ]

# மக்களைத் திசைதிருப்ப அரசு முயற்சிக்கிறதாம்

## பரு. எம். பி. குற்றச்சாட்டு

[புலோலி]
''அரசாங்கம் வகுப்புவாதம் பேசி தமிழினத்தின் கலாச்சாரத்தையும் தமிழ் மக்களையும் அழித்து ஒடுக்கிவிடமுடியாது. திட்டமிடப்படாத பொருளாதாரக் கொள்கையால் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்னைகளிலிருந்து மக்களை திசை திருப்புவதற்காகவே அரசாங்கம் வகுப்புவாதத்தைப் பேசுகின்றது- இதற்காகவே எதிர்க்கட்சித்தலைவரின் மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறு பருத்தித்துறை இளைஞர் பேரவையினால் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. மு, தம்பிமுத்துவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை எம். பி. திரு. கே துரைரத்தினம் குறிப்பிட்டார்.

பருத்தித்துறைமுனைதிக்கமைதானத்தில் சிவகுமாரன் அரங்கில் திரு. மு. ஈழத்தமிழ்மணி தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பு வைபவத்தை யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினமும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து பேசிய எம். பி. திரு. துரைரத்தினம்குறிப்பிட்டதாவது!

தமிழினத்திற்கு இன்றைய நிலையில் என்ன இன்னல்கள் நேரிடினும் அவற்றையெல்லாம் சகித்துக் கொள்வதன் மூலமே நாம் வெற்றி பெற்று இலட்சியத்தையடையமுடியும்.

அரசாங்கம் அந்நிய நாடுகளில் கடனைப்பெற்று நாட்டை வங்குரோத்து நிலைக்குத்தள்ளி விட்டது. நாட்டில் எதிர்பாராத அளவுக்கு பொருளாதாரப்பிரச்னை உருவாகப்போகின்றது. இந்நிலை அரசாங்கம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பொருட்களுக்குக் கட்டுப்பாடுவிதிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையினாலேயே இன்று நாடு வங்ரோத்து நிலைக்கு வந்துள்ளது. இந்நிலைகளை மூடிமறைத்து மக்களை ஏமாற்றுவதற்காகவே வகுப்புவாதத்தை உண்டாக்குகின்றனர். இந்நிலைகளை நன்குணர்ந்து நாம் நிதானமான முறையில் செயற்படவேண்டும்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். நகர முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் திரு. மு. தம்பிமுத்து இளைப்பாறிய ஆசிரியர் திரு. சரவணமுத்து, சட்டத்தரணி பாலகிருஷ்ணன், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. சிவசுப்பிரமணியம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினார்கள். [இ]

# இன்று அலங்கார உற்சவ விழா

[யாழ்ப்பாணம்]
சுதுமலை எச்சாட்டி வைரவர் கோவில் அலங்கார உற்சவ விழா இன்று சிறப்பாக நடைபெறும். விசேட நிகழ்ச்சியாக சிறப்புச் சொற்பொழிவுகளும், மேளக் கச்சேரிகளும் இடம்பெறும்.

150 ஆண்டுப் பழமை வாய்ந்த இக்கோவிலில் நாளை காலை வருடாந்தப் பொங்கல் விழா நடைபெறும்.

ஃ ஃ ஃ

[மட்டுவில்]
மட்டுவில் தெற்கு சோமஸ் கந்தா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### எட்மின் துரைரட்ணசிங்கம் ஹென்ஸ்மன்

சுண்டிக்குளியைச் சேர்ந்தவரும், கார்மாட் கம்பனியில் கடமையாற்றியவருமான எட்வின் துரைரட்ணசிங்கம் ஹென்ஸ்மன் அகால மரணமானார். இவர், வசாவிளான் மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் விக்டர் ஹென்ஸ்மன், யாழ்ப்பாணம் திருக்குடும்ப ஆங்கிலப் பாடசாலை முன்னாள் ஆசிரியையான கிருபை ஆகியோரின் அன்புப் புதல்வரும், ஜெஸ்மினது [ஹட்டன் நஷனல் வங்கி கொழும்பு] அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலா ஹென்ஸ்மன், டேவிட் ஹென்ஸ்மன் [வர்த்தக வங்கி,யாழ்ப்பாணம்] ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரது பிரேத சேம ஆராதனை அவரது இல்லமான 46, காட்டுக்கந்தோர் ஒழுங்கையில், நாளை [03-08-81], திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு நடைபெற்று, கொட்டடியிலுள்ள சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்

0487

உ

உரும்பிராய் தெற்கு
திரு. க. தா. வேலுப்பிள்ளை
அவர்களின்

## ஆன்மசாந்திக் கிரியை அழைப்பு

அன்புடையீர், வணக்கம்.

06-07-1981 திங்கள் சிவபதமடைந்த எமது குடும்ப முதல்வரும், வரணியூரருமான திரு. க. தா. வேலுப்பிள்ளை அவர்களது அந்தியேட்டிக்கிரியைகள் 03-08-1981 திங்கட்கிழமை முற்பகல் கீரிமலையிலும்,

வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகள் 05-08-1981 புதன்கிழமை முற்பகல் உரும்பிராயிலுள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. குறித்த ஆன்மசாந்திக் கிரியைகள் அனைத்திலும் கலந்து கொள்வதுடன் 05-08-1981 புதன்கிழமை மதிய போசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு தங்கள் அனைவரையும் மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம். வணக்கம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்.

'தங்கவேல் மாளிகை',
உரும்பிராய், 2-08-1981

0500

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி, 63ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறைவீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஓகஸ்ட் 2ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office: Sri Lanka. Regd. Q B 100236/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.